கடலிடை றதீசும் அனலிடை ரவாசும் காற்றிடை கலந்தவர் தானோ
கண்வழிந்தோடிட எங்கள் ஜனார்த்தனன் காவியமானவன் தானோ
பொய்யாமொழியும் ரதனும் வரனும் போனார் மீண்டும் வரவில்லை
மதனியும் விக்கியும் போயினர் சுபாசும் எம்மிடம் வரவில்லை

விடியும்நேரம் பகைவன்தேசம் உறங்கிக்கிடந்தது -துறை
முகத்தினுள்ளே கடலின்புலிகள் இறங்கிநடந்தனர்
சிறிதுநேரம் அமைதியாகி பொழுதும்கரைந்தததது -பின்னர்
இடியினோடு பகைவன்ஏறும் கலங்கள் எரிந்தன

விடியும்நேரம் பகைவன்தேசம் உறங்கிக்கிடந்தது -துறை
முகத்தினுள்ளே கடலின்புலிகள் இறங்கிநடந்தனர்

அழகுபூத்த எமதுஊரை அழிக்கநினைத்தவா -எம்மை
அகதியாக்கி தெருவினோரம் மழையில்நனைத்தவா *2*
கடலின்புலிகள் உனதுநகரை கலக்கிமுடித்தனர் -படைக்
கலங்கள்மூன்றை உடைத்தபோது உடலும்வெடித்தனர்

விடியும்நேரம் பகைவன்தேசம் உறங்கிக்கிடந்தது -துறை
முகத்தினுள்ளே கடலின்புலிகள் இறங்கிநடந்தனர்

தலைவன்வளர்த்த உறவைநினைத்து கடலில்குதித்தனர் -வெடி
தாங்கிப்பகைவர் துறையுள்புகுந்து வெடித்துஅதிர்ந்தனர். *2*
தமிழர்தேசம் எழுகஎழுக என்றுஆடினர் -எம்
தலைவன்பெயரை நிலவும்அறிய உரத்துப்பாடினர்

விடியும்நேரம் பகைவன்தேசம் உறங்கிக்கிடந்தது -துறை
முகத்தினுள்ளே கடலின்புலிகள் இறங்கிநடந்தனர்

அமைதியாக உறங்கும்நேரம் பகைக்குஇனியில்லை -எங்கள்
அன்னைபூமி விடியும்வரைக்கும் எமக்கும்அதுஇல்லை *2*
கடலின்புலிகள் இருக்கும்வரைக்கும் எமக்குப்பயமில்லை -இங்கு
கரியபுலிகள் வெடிக்கும்திசையில் பகைக்குஜெயமில்லை
விடியும்நேரம் பகைவன்தேசம் உறங்கிக்கிடந்தது -துறை
முகத்தினுள்ளே கடலின்புலிகள் இறங்கிநடந்தனர்